

இலங்கை – யாழ்ப்பாணம்

மாதகல் – கனடா

அமரர்.

# திரு. க. தில்லைநடராசா

அவர்களின்

# நினைவு மலர்

[illegible]-09-2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



யாழ்ப்பாணம் மாதகலைப் பிறப்பிடமாகவும்
கனடா நாட்டை வசிப்பிடமாகவும் கொண்டவரும்
உயர் சைவ வேளாண் குல மரபில் தோன்றியவருமாகிய

அமரர்.

# திரு. க. தில்லைநடராசா

அவர்களின்

பிரிவு குறித்து வெளியிடப்பெற்ற

# நினைவு மலர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சமர்ப்பணம்

எங்கள் குலவிளக்காய் இருந்து
எமக்கு நன்னெறி காட்டி
எமக்கோர் ஊன்றுகோலாய் உற்ற துணையாய் நின்று
எம் உயர்வுக்காய் பலவழிகளிலும் பாடுபட்ட நீங்கள்
இன்று எம்முடன் இல்லையாயினும்
உங்கள் இனிய நினைவுகளை
எங்கள் மனதில் சுமந்துகொண்டு
தங்கள் பண்பார் பாதங்களுக்கு கண்ணீருடன் கலந்து
இம்மலரை சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

**விநாயகர் துதி**

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே
விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

ஈன்றாளு மாயெனக் கெந்தையு மாயுடன் தோன்றினராய்
மூன்றையுலகம் படைத்துகந் தான் மனத் துள்ளிருக்க
ஏன்றானிமையவர்க் கன்பன்திருப்பாதி ரிப்புலியூர்
தோன்றாத் துணையாயிருந்தனன் றன்னடி யோங்களுக்கே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆறாமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதமளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவ தினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர்விளக்கே! உவாப்பிலாஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர்ப்பளிங்கின் திரள்மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும்தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக்கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமாவிளம்பே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கடலீந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

ஏறுமயிலேறி விளையாடு முகமொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகமொன்றே
கூறுமடியார்கள் வினை தீத்த முகமொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகமொன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம்புணர வந்த முகமொன்றே
ஆறுமுகமான பொருள் நீயருள வேண்டும்
ஆதி அருணாசலமமர்ந்த பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க! மலிவளம் சுரக்க! மன்னன்
கோன்முறை அரசுசெய்க! குறைவிலா துயிர்கள் வாழ்க!
நான்மறை அறங்கள் ஓங்க! நற்றவம் வேள்வி மல்க!
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அமரர். திரு. க. தில்லைநடராசா அவர்களின் வாழ்க்கை வரலாறு

நித்திலத்தின் முத்து எனப்படும் ஈழவளத்திருநாட்டின் வடக்கில் அமைந்துள்ளது யாழ்ப்பாணக் குடாநாடு. இக்குடா நாட்டில் கி.மு. காலத்தில் நாக இனத்தவர்கள் வாழ்ந்ததாக இலக்கிய சான்றுகள் காணப்படுகின்றன. ஆரியர் இந்தியாவின் மீது படையெடுத்த போது வடஇந்தியாவில் சிலர் வாழ்ந்த திராவிடர் தெற்கு நோக்கி இடம்பெயர்ந்தனர் என்றும் இவர்களுள் இந்தியாவையையும் யாழ்ப்பாணத்தையும் பிரிக்கும் பாக்குநீரினை ஊடாக வடஇலங்கையில் குடியேறினர் எனவும் கொள்ளப்படுகிறது. இவ்வாறு ஏற்பட்ட குடியேற்றங்களை ஒன்றிணைத்து வெடியரசன் என்பவன் நாக தீபத்தை ஆண்டதாக பரம்பரை பரம்பரையாக நம்பிக்கை கொள்கின்றனர். நாக தீபத்தை ஆண்ட வெடியரசன தம்பியருள் ஒருவனான விளங்குதேவன் குறுநில மன்னனாக சுழிபுரத்திற்கு வடபால் ஆண்டதாக ஐதிகம். இந்தப்பகுதி மாதகலை உள்ளடக்கியது என கொள்வர்.

மாதகல் யாழ்ப்பாணத்தின் வடமேற்கில் அமைந்துள்ளது. இருபக்கமும் பாக்குநீரினையால் சூழப்பட்டு கிழக்கில் பெரியவிளான் இளவாலை ஊர்களாலும் தெற்கில் பண்டத்தரிப்பு சில்லாலை ஊர்களாலும் சூழப்பட்டுள்ளது. மாதகல் என்பது மாது + அகல் என்றும் மாது + கல் என்றும் விளக்கி நிற்பர். இங்கு மாது+ கல் அழைக்கப்படும் மாதொரு பாகனாம் சிவன் ஆலயம் மாதகல் சம்பில்துறையில் அமைந்திருந்ததென்றும் இது கடலால் கொள்ளப்பட்டது என்றும் நம்புகின்றனர். பின்னர் வந்த பெரும் வர்த்தகர்கள் சம்பில்துறையில் சம்புகேஸ்வரம் என்ற ஆலயத்தை நிறுவினர் என்றும் இவ்வாலயம் 1870இல் ஏற்பட்ட புயலாலும் வெள்ளப்பெருக்காலும் அழிந்தது என்றும் இக்கோவிலில் உள்ள சிலைகள் சுழிபுரம் பகுதியில் நிறுவப்பட்டது என்றும் குறிப்புகள் காணப்படுகின்றது. கி.மு. 247இல் தேவநம்பியதீசன் காலத்தில் சங்கமித்திதை என்ற பிக்குணி சம்பில்துறையில் வந்து இறங்கினர். இதனை மகாவம்சம் ஜம்புக்கோளம் எனச்சுட்டி நிற்கிறது. இன்று பௌத்த விகாரை அமைக்கப்பட்டு பௌத்தர்களின் சுற்றுலாத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலமாக மாற்றப்பட்டுள்ளது. இங்கு புதிதாக சம்புகேஸ்வரம் புனர்நிர்மானம் செய்யப்பட்டுள்ளது.

இத்தகைய சிறப்புக்களுடைய மாதகல் கடல்வளம் நிலவளமும் கொண்டது. இங்கு வேளாண்மையில் சிறந்து விளங்கிய வேளாளர் மரபில் விசுவர் வாழ்வில் இணைந்த சீதாங்கனியம்மா குடும்பத்தில் கந்தையா பிறந்து சிறந்து விளங்கினார். இவர் தம் இல்லாள் லக்சுமியுடன் சீரும் சிறப்புமாக வாழுங்காலத்தில் இவர்கள் பரமேஸ்வரி, தில்லைநடராசா, தவமணி ஆகிய பிள்ளைச் செல்வங்களை பெற்றனர். உரியகாலத்தில் பரமேஸ்வரி செல்லப்பா என்பவரை கடிமணம் செய்து புத்திர பாக்கியங்களைப் பெற்றார். மகனான தில்லைநடராசா 1938ஆம் ஆண்டு புத்திரனாக அவதரித்தார். இவர் தம் குழந்தைப் பருவத்தில் பெற்றோர்களின் பொக்கிஷம் போன்று பேணிப் பாதுகாக்கப்பட்டார். தமது ஒரே புத்திரனை அன்புடனும், பாசத்துடனும் வளர்த்தனர். பிள்ளைப் பருவம் முடிய கல்வி கற்க விசுவநாதர் வாத்தியாரிடம் ஒப்படைத்தனர். அக்காலத்தில் பாடசாலைக்கு மாணவர்களை அழைத்து செல்வதற்கு ஒருவர் பொறுப்பாக இருந்தார். அந்தவகையில் விசுவநாதர் வாத்தியார் செயற்பட்டார். அமரர் மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் கல்வி கற்று பின்னர் மாதகல் சென் யோசவ் மகா வித்தியாலயத்தில் தரம் 6இல் சேர்ந்து தரம் 10 வரை கல்வி கற்றார். தனது இடைநிலைக் கல்வியை முடித்ததும் தந்தையுடன் விவசாயத்தில் ஈடுபட்டு அதன் நுட்பங்களை பெற்றார். பெற்றோர் இவரின் பாடசாலைக் கல்வி முடிந்தவுடன் வேலை தேடுவதில் ஈடுபட்டனர். அக்காலத்தில் மாதகல் மத்திய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் விவசாயிகளின் தோழனாக இருந்தது. நுகர்பொருள் விற்பனை, விவசாய பொருட்கள் வாங்கி விற்பனையில் ஈடுபட்டு நல்ல முன்னேற்றத்தைக் கண்டது சங்கம் இந்நிறுவனத்தில் விவசாய கள உத்தியோக உத்தியோத்தராக நியமனம் பெற்றார். இவருக்கு திருமணம் செய்து பார்க்க விரும்பின இதேயூரைச் சேர்ந்த வேளாண்குடி மரபில் வந்துதித்த விசுவலிங்கம் நாகம்மா தம்பதிகளின் ஏகபுத்திரியான ஞானாம்பிகை நன்மகளாக வளர்ந்து வந்தார். இவர் தம் தந்தை மலாயன் உத்தியோகத்தர். இதனால் சீரும் சிறப்புமாக வாழ்ந்த வீட்டில் தமது மகனுக்கு பெண் கொண்டனர் பெற்றோர். அன்னாரும் ஞானாம்பிகையுடன் இணைந்து இனிதே குடும்பம் நடத்தினர் இல்லற வாழ்வில் சிறப்பான பிள்ளைகளை பெறுதலே என்பதற் கிணங்க இவர்களுக்கு மூத்தபிள்ளையாக ஞானறஞ்சினி (சாந்தினி) பிறந்தார். தம் பெண்ணை கல்வி கேள்விகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கச் செய்து மாதகலைச் சேர்ந்த இராமலிங்கம் கனகலிங்கம் என்பவரை தம் மகளுக்கு திருமணம் செய்து வைத்தனர். இவர்கள் வாழ்வு சீர்பெற்று விளங்கிய காளை தம்மகள் ஊடாக பேரர், போர்த்திகளையும் கண்டு மகிழ்ந்தனர். கனடா செல்லும் வரை பேரன் பேர்த்திகளான தவச்செல்வன், கவிப்பிரியா, கிருஸ்ணரூபன் ஆகியோர் மழலை மொழியையும் தள்ளாடி நடந்த காட்சியிலும் இன்பம் கண்டனர். அமரரின் சந்ததி சிறக்க இரண்டாவதாக மகன் பிறந்தார். அவருக்கு தயாபரன் என்று நாமம் சூட்டி கல்வி கெள்விகளில் சிறக்கச் செய்தனர். இவர் இளமைப்பருவம் வந்து சேர்ந்ததும் தனது சகோதரியான பரமேஸ்வரி செல்லப்பா தம்பதியினரின் மகளான சறோஜினிதேவியை திருமாங்கல்யம் செய்தனர். இவர்களின் வாழ்வு துலங்க ஜனார்த்தன், மகிந்தன், கேமப்பிரியன் புத்திர்களாக பிறந்தனர்.

அமரர் குடும்பத்தில் மூன்றாவது பிள்ளையாக புனிதவதி பிறந்தார். இவரையும் நன்கு சீராட்டி வளர்த்தனர் கல்வி கேள்விகளில் சிறக்க வைத்தனர். இவருக்கு மாதகலைச் சேர்ந்த குமாரசாமி மகன் குணரத்தினராசாவை கடிமணம் செய்து வைத்தனர். இவர்கள் இல்லறம் சிறக்க தர்சினி, சர்மினி, கிபாசினி ஆகியோர் புத்திரிகளாக பிறந்தனர். இன்று இவர்கள் கனடா தேசத்தில் பல வளங்களும் பெற்று தம் தந்தைக்கு ஆதரவாக இருந்தனர்.

அமரரின் நான்காவது பிள்ளையாக குணதாசன் (துரை) பிறந்தார். இவரின் இளமைக்காலக் கல்வியை யா/ மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாாலயம் சென்யோசவ் வித்தியாலயத்தில் மேற்கொள்ளச்செய்து நாட்டின் சூழ்நிலை இளைஞர்கள் வாழ்வதற்கு ஏற்றதாக அமையாமையால் இவரை கனடாவுக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவர் வாழ்க்கையில் மாதகலிருந்து இடம்பெயர்ந்து கனடாவில் வாழும் சின்னத்தம்பி மகள் விஜயலச்சுமி என்ற பெண்ணை பேசி தமது மகனுக்கு துணையாக்கினார். இவர்கள் இனிதே வாழுங்காலங்களில் இவர்களுக்கு லகிஷா, கவிஷா ஆகிய இரண்டு பெண் குழந்தைகள் கிடைத்தனர். அமரரும் இவர்களுடன் வாழ்ந்தபோது அவரை நன்றாக பேணிப் பாதுகாத்தனர்.

கனிஷ்ட புத்திரியாக நர்மதா பிறந்தார். இவர் கனடாவில் கல்வி பயின்று உரிய பருவம் வந்துற்றதும் மாதகல் மேற்கைச் சேர்ந்த தற்போது கனடாவில் வசிக்கும் சண்முகநாதன் மகள் பத்மசீலன் என்பவருக்கு கைப்பிடித்து கொடுத்தனர். இருவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் ஒருமனதானதால் அவர்கள் பெற்றோரும் இவர்களை இணைத்து வைத்தனர். இவர் வாழ்வின் பெருமையை பெற்றுக்கொள்ள இவர்கள் நற்பயனால் ஆருஜா என்பவள் தோன்றினாள் இவர்கள் கனடாவில் சீரும் சிறப்புமாக வாழ்கின்றனர்.

அமரர் அவர்கள் மாதகல் மத்திய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பண்டத்தரிப்பு பரிஷ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துடன் 1971இல் இணைக்கப்பட்டார். அச்சங்கத்தின் பணியாளர் ஆயினார். அங்கும் விவசாய களப் பணியாளராக கடமையாற்றினார். தான் கடமையாற்றிய காலத்தில் சங்கம் தரமான வெங்காயம் கொள்வனவு செய்து விற்பனை செய்வதற்கு நேர்மையுடன் பணியாற்றினர்.

காலச்சக்கரம் மாற நாட்டின் சூழலும் மாறியது இங்கு வாழ்வது கேள்விக்குறியானது. மக்கள் இருவர் கனடாவில் வாழ்ந்து வரும்போது இங்கு நாட்டில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு சுமை கொடுக்க கூடாது என்பதற்காகவும் தமது கனிஷ்ட புத்திரியை கனடா அழைத்து செல்லும் நோக்குடன் கனடாவுக்கு மாறினர். அங்கு கனடாவில் வாழும் புனிதவதி, குணதாசன், நர்மதா குடும்பங்களுடன் இணைந்து கொண்டார்.

கிராமமத்திலுள்ள அனைத்துமக்களும் மிதிக்க தக்க வகையில் நிறைவான வாழ்க்கைப் பாதையில் நடந்துசென்ற இவர் சிறிதுகாலம் நோய்வாய்பட்டு இருந்தார். 02-08-2012இல் இறைவனடி சேர்ந்தார். அவரின் ஆத்மாசாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

***ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவட்டுறவாளர் தில்லைநடராசா

மெலிந்து உயர்ந்த வளமான தோற்றம்
நலிந்து போன மக்களின் நலம் காக்கும் நோக்கம்
ஒலிந்து நிற்கும் அவர் முகத்தில் இனிய புன்முறுவல்
மலிந்திருக்கும் அவர் மனதில் மனித நேயம்
வலிந்து வரும் பகை களையும் தன்வசமாக்கித் தான்
நலிந்து போகாமல் என்றும் நிமிர்ந்து நிற்கும் மனிதன்.

கூட்டுறவின் ஆரம்பம் மாதகல் மத்தியில்
நாட்டமுடன் அதில் இணைந்தார் சேவை மனதுடனே
வீட்டிலினும் தன் கடமை விருப்பமுடன் செய்திடுவார்
தோட்டங்களும் சோர்வின்றி செம்மையாகச் செய்யும் இவர்
காட்டிநின்ற நேர்மை, கடும் உழைப்பு, விசுவாசம் - ஆதலால்
கூட்டுறவின் தந்தையான ஜேபி கந்தையா மாஸ்ரரோடு
கூட்டுச் சேர்ந்து பெற்ற நல்ல அனுபவமும் நல்ல
நாட்டமதால் சகபாடிகளின் தக்க நல்ல நன்மதிப்பும்
ஈட்டியதே கூட்டறவில் இவர்க்கு ஒரு மரியாதை

தங்கி நிற்கும் ஸ்தாபனத்தை தலைநிமிர வைக்கும் - இவர்
பொங்கி வரும் கோபமதை வெளியிலே காட்டமாட்டார்
இங்கிதமாய் கதைக்கும் இவர் இயல்பு உயர்ச்சியிலே
பங்களித்த தன்மை கண்டு பெருமிதமும் கொண்டனரே
அங்கத்தவர்கள் அனைவரையும் அணைத்து நிற்கும் சுபாவமும்
சங்கத்தின் வளர்ச்சியிலே படியாக அமைந்த கிராமிய
வங்கியிலும் மாறும் தொழில் சார்ந்த யாவற்றிலும்
சங்கமதன் நன்மைக்காய் உழைத்து நின்றார் பொறுமையோடு
பங்களித்த பணியாளர் பலரோடு நேர்மையொடு பவரோடு
சங்கமகன் உயர்ச்சிக்குத் தோள்கொடுத்து நின்றாரே
வாடிக்கையாளருக்கு இவர் ஒரு சேவகன்
ஓடிக் கைகொடுத்து உதவுவதில் பேருபகாரி
தேடிவரும் ஏதிலிக்கு தெளிவுதரும் நல்ஆசான்
வாடி நிற்போர் தமக்கு வளம் செய்யும் வள்ளல்
தேடி வைத்த செல்வமதால் தெளிவுடனே நல்வாழ்வு
தேடி வைத்தார் தம் மக்கட்கு செழிப்பான வாழ்வதனைத்
நாடி நிற்கும் நற் ததியை வேண்டியே சிவனை
நாடிப் பேய் சென்றுவிட்டார் நம்மை இங்கு விட்டுவிட்டு.

கூட்டுறவாளர்கள்
சக கூட்டுறவு பணியாளன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

*மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த*
*திருவாசகம்*

திருவாசச் சிறப்பு

தொல்லை இரும்பிறவிச் சூழும்தளை நீக்கி
அல்லலறுத் தானந்த ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூரெங்கோன்
திருவா சகமென்னுந்தேன்.

# சிவபுராணம்

(கலிவெண்பா)
திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்ற ண்ணிப்பான் றாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவா உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன்அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்நிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிறைந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாக வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்க மளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பா யழிப்பா யருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கும் மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கலப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேன் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேஓ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற்பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிச் செய்த

# சகல கலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன் றிநின் பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோ சகமேழுமளித்
துண்டா னுறங்க வொழித் தான்பித்
தாகவுண்டாக்கும் வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட றூற்கடலுந்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர் செந்நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழிதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள்ளோமதிமப் பேடே
சகல கலாவல்லியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்விற் பனமு மவதான
முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமை நல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பினுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்தி சூடி

## கடவுள் வாழ்த்து

ஆத்தி சூடி யமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோ மியாமே

01. அறஞ் செய விரும்பு
02. ஆறுவது சினம்
03. இயல்வது கரவேல்
04. ஈவது விளக்கேல்
05. உடையது விளம்பேல்
06. ஊக்கமது கைவிடேல்
07. எண்ணெழுத் திகழேல்
08. ஏற்ப திகழ்ச்சி
09. ஐய மிட்டுண்
10. ஒப்புர வொழுகு
11. ஓதுவ தொழியேல்
12. ஔவியம் பேசேல்
13. அஃகஞ் சுருக்கேல்
14. கண்டொன்று சொல்லேல்
15. ஙப்போல் வளை
16. சனி நீராடு
17. நயம்பட வுரை
18. இடம்பட வீடெடேல்
19. இணக்கமறிந் திணங்கு
20. தந்தை தாய் பேண்
21. நன்றி மறவேல்
22. பருவத்தே பயிர் செய்
23. மன்று பறித் துண்ணேல்
24. இயல்பலாதன செயேல்
25. அரவ மாட்டேல்
26. இலவம் பஞ்சிற்றுயில்
27. வஞ்சகம் பேசேல்
28. அழகலாதன செயேல்
29. இளமையிற் கல்
30. அரனை மறவேல்
31. அனந்த லாடேல்
32. கடிவது மற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. காப்பது விரதம்
34. கிழமைப்பட வாழ்
35. கீழ்மை யகற்று
36. குணமது கைவிடேல்
37. கூடிப் பிரியேல்
38. கெடுப்ப தொழி
39. கேள்வி முயல்
40. கைவினை கரவேல்
41. கொள்ளை விரும்பேல்
42. கோதாட் டொழி
43. சக்கரநெறி நில்
44. சான்றோ ரினத்திரு
45. சித்திரம் பேசேல்
46. சீர்மை மறவேல்
47. சுழிக்கச் சொல்லேல்
48. சூது விரும்பேல்
49. செய்வன திருந்தச்செய்
50. சேரிடமறிந்து சேர்
51. சையெனத் திரியேல்
52. சொற் சோர்வுபடேல்
53. சோம்பித் திரியேல்
54. தக்கோனெனத் திரி
55. தானமது விரும்பு
56. திருமாலுக்கு அடிமைசெய்
57. தீவினை யகற்று
58. துன்பத்துக் கிடங்கொடேல்
59. தூக்கி வினைசெய்
60. தெய்வ மிகழேல்
61. தேசத்தோ டொத்துவாழ்
62. தையல் சொற்கேளேல்
63. தொன்மை மறவேல்
64. தோற்பன தொடரேல்
65. நன்மை கடைப்பிடி
66. நாடொப்பன செய்
67. நிலையிற் பிரியேல்
68. நீர் விளையாடேல்
69. நுண்மை நுகரேல்
70. நூல்பல கல்
71. நெற்பயிர் விளை
72. நேர்பட வொழுகு
73. நைவினை நணுகேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

74. நொய்ய வுரையேல்
75. நோய்க் கிடங்கொடேல்
76. பழிப்பன பகரேல்
77. பாம்பொடு பழகேல்
78. பிழைபடச் சொல்லேல்
79. பீடுபெற நில்
80. புகழ்ந்தாரைப் போற்றி வாழ்
81. பூமி திருத்தியுண்
82. பெரியாரைத் துணைகொள்
83. பேதமை யகற்று
84. பையலோ டிணங்கேல்
85. பொருள்தனைப் போற்றிவாழ்
86. போர்த்தொழில் புரியேல்
87. மனந் தடுமாறேல்
88. மாற்றானுக்கு இடங்கொடேல்
89. மிகைபடச் சொல்லேல்
90. மீதூண் விரும்பேல்
91. முனைமுகத்து நில்லேல்
92. மூர்க்கரோ டிணங்கேல்
93. மெல்லினல்லாள் தோள்சேர்
94. மேன்மக்கள் சொற்கேள்
95. மைவிழியார் மனையகல்
96. மொழிவதற மொழி
97. மோகத்தை முனி
98. வல்லமை பேசேல்
99. வாது முற்கூறேல்
100. வித்தை விரும்பு
101. வீடுபெற நில்
102. உத்தமனாயிரு
103. ஊருடன் கூடிவாழ்
104. வெட்டெனப் பேசேல்
105. வேண்டி வினைசெயேல்
106. வைகறைத் துயிலெழு
107. ஒன்னாரைத் தேறேல்
108. ஓரஞ் சொல்லேல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொன்றை வேந்தன்

## கடவுள் வாழ்த்து

கொன்றை வேந்தன் செல்வ னடியிணை
என்று மேத்தித் தொழுவோம் யாமே

## நூல்

01. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
02. ஆலயந் தொழுவ சாலவு நன்று
03. இல்லறம் அல்லது நல்லறம் அன்று
04. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்
05. உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு
06. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்
07. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்
08. ஏவா மக்கள் மூவா மருந்து
09. ஐயம் புகினும் செய்வன செய்
10. ஒருவனைப் பற்றி ஓரகத்திரு
11. ஓதலி னன்றே வேதியர்க் கொழுக்கம்
12. ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு கழிவு
13. அஃகமும் காசும் சிக்கெனத் தேடு
14. கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை
15. காவல் தானே பாவையர்க் கழகு
16. கிட்டாதாயின் வெட்டென மற
17. கீழோ ராயினுந் தாழவுரை
18. குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை
19. கூரம் பாயினும் வீரியம் பேசேல்
20. கெடுவது செய்யின் விடுவது கருமம்
21. கேட்டி லுறுதி கூட்டு முடமை
22. கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி
23. கொற்றவன் அறிதல் உற்றிடத் துதவி
24. கோட்செவிக் குறளை காற்றுடன் நெருப்பு
25. கௌவை சொல்லின் எவ்வருக்கும் பகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. சந்ததிக் கழகு வந்தி செய்யாமை
27. சான்றோ ரென்கை யீன்றோர்க் கழகு
28. சிவத்தைப் பேணின் தவத்திற் கழகு
29. சீரைத் தேடின் ஏரைத் தேடு
30. சுற்றத்திற் கழகு சூழவிருத்தல்
31. சூதும் வாதும் வேதனை செய்யும்
32. செய்தவ மறந்தாற் கைதவ மாளும்
33. சேமம் புகினும் யாமத் துறங்கு
34. சையொத் திருந்தால் ஐயமிட் டுண்
35. சொக்க ரென்பர் அத்தம் பெறுவர்
36. சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்
37. தந்தை சொல் மிக்க மந்திரமில்லை
38. தாயிற் சிறந்ததொரு கோயிலு மில்லை
39. திரைகட லோடியும் திரவியந் தேடு
40. தீராக் கோபம் போராய் முடியும்
41. துடியாப் பேண்டிர் மடியில் நெருப்பு
42. தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்
43. தெய்வஞ் சீறின் கைதவ மாளும்
44. தேடா தழிக்கிற் பாடா முடியும்
45. தையும் மாசியும் வையகத் துறங்கு
46. தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது
47. தோழ னொடும் ஏழைமை பேசேல்
48. நல்லிணக்கம் அல்ல தல்லற் படுத்தும்
49. நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை
50. நிற்கக் கற்றல் சொற்றிறம் பாமை
51. நீரகம் பொருந்திய வூரகத் திரு
52. நுண்ணிய கருமமு மெண்ணித் துணி
53. நூன்முறை தெரிந்து சீலத் தொழுகு
54. நெஞ்சை யொழித்தொரு வஞ்சக மில்லை
55. நேரா நோன்பு சீராகாது
56. நைபவ ரெனினு நொய்ய வுரையேல்
57. நொய்யவ ரென்பவர் வெய்யவ ராவர்
58. நோன்பென் பதுவே கொன்று தின்னாமை
59. பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60. பாலோ டாயினும் கால மறிந்துண்
61. பிறர்மனை புகாமை அறமெனத் தகும்
62. பீரம் பேணி பாரந் தாங்கும்
63. புலையுங் கொலையுங் களவுந் தவிர்
64. பூரியோர்க் கில்லை சீரிய வொழுக்கம்
65. பெற்றோர்க் கில்லை சுற்றமும் சினமும்
66. பேதமை யென்பது மாதர்க் கணிகலம்
67. பையச் சென்றால் வையந் தாங்கும்
68. பொல்லாங் கென்பவை எல்லாந் தவிர்
69. போனக மென்பது தானுழந் துண்டல்
70. மருந்தே யாயினும் விருந்தோ டுண்
71. மாரி யல்லது காரிய மில்லை
72. மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை
73. மீகாம னில்லா மரக்கல மோடாது
74. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்
75. மூத்தோர் சொன்ன வார்த்தை அமிர்தம்
76. மெத்தையிற் படுத்த னித்திரைக் கழகு
77. மேழிச் செல்வங் கோழை படாது
78. மைவிழி யார்தம் மனையகன் றொழுகு
79. மொழிவது மறுக்கின் அழிவது கருமம்
80. மோன மென்பது ஞான வரம்பு
81. வளவ னாயினு மளவறிந் தளித்துண்
82. வானம் சுருங்கின் தானம் சுருங்கும்
83. விருந்திலோர்க்கில்லை பொருந்திய ஒழுக்கம்
84. வீரன் கேண்மை கூரம் பாகும்
85. உரவோ ரென்கை யிரவா திருத்தல்
86. ஊக்க முடைமை ஆக்கத்திற் கழகு
87. வெள்ளைக் கில்லை கள்ளச் சிந்தை
88. வேந்தன் சீறி னாந்துணை யில்லை
89. வையந் தோறும் தெய்வந் தொழு
90. ஒத்த விடத்தில் நித்திரை கொள்
91. ஓதார்க் கில்லை யுணர்வொடும் ஒழுக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

**"எந்நன்றி கொன்றாற்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்நன்றி கொன்ற மகர்கு"**

என்ற வள்ளுவர் வாக்கிற்கு அமைய எங்கள் குலவிளக்கு அணைந்த செய்தி கேட்டு ஓடோடி வந்து ஆறுதல் கூறி அனுதாபந் தெரிவித்தோருக்கும், அஞ்சலி பிரசுரம் வெளியிட்டோருக்கும், மற்றும் தொலைபேசி, தபால், தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் இறுதிக்கிரியைகள் இறுதி ஊர்வலம் ஆகியவற்றில் பங்கு பற்றியோருக்கும் உங்கள் கைகளில் தவழும் இம்மலரை அழகுற அச்சிட்டுத்தந்த சங்கானை திருமொழி அச்சக உரிமையாளருக்கும் மற்றும் பல வழிகளிலும் எமக்கு தோளோடு தோள் கொடுத்து உதவிகள் பல செய்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.




இங்ஙனம்
குடும்பத்தினர்

**மாதகல்.**
**கனடா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர் எழுத்துக்கள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| க் | ங் | ச் | ஞ் | ட் | ண் | த் | ந் | ப் |
| ம் | ய் | ர் | ல் | வ் | ழ் | ள் | ற் | ன் |

| | | | | |
|---|---|---|---|---|
| அ | ஆ | இ | ஈ | உ |
| ஊ | எ | ஏ | ஐ | ஒ |
| ஓ | ஔ | ஃ | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | | | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org